## இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2011

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 மற்றும் 2010 ஆம் அண்டுகளின் நிலைபேறு சுற்றுலாத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் சார்பில் செலவிடப்பட்ட போது முறையே ரூபா 170,960 மற்றும் ரூபா 921,602 தொகைகள்இந்த செயற்திட்டத்திலிருந்து பெறவேண்டியவையாக கணக்கிடுவதற்குப் பதிலாக பணியகத்தின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது..

(ஆ) மீளாய்வாண்டின் போது 2010 ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத்துறை பரிசு நிகழ்ச்சித்திட்டதிற்காக பணியகத்தால் ரூபா 7,150,286 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழச்சித்திட்டம் அவர்களுடைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டதின்படி தேசிய நிகழ்சிசத்திட்டமாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையால் (எஸ்எல்ரீடிஏ) நடாத்தப்பட்டது. எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட தொகையை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்காமல் பணியகத்தின் சந்தைப்படுத்தல் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

**1.2.2 கணக்கீட்டுப் பதிவேடுகளின் பேணுகை**

மீளாய்வாண்டின் போது 354 நாட்குறிப்புப் பதிவுகள் ஊடாக பல்வேறு கணக்குகளிற்கு ரூபா 22,014,021 ஆன தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நாட்குறிப்புப் புத்தகம் பேணப்பட்டிருக்காததுடன் நாட்குறிப்புப் பதிவுகள் பூரணமற்றிருந்தன. தயாரித்த மற்றும் அனுமதியளித்த உத்தியோகத்தர்களின் முதலெழுத்தொப்பங்கள் மற்றும் குறுகிய விளக்கங்கள் போன்ற அடிப்படைத் தகவல்கள் கூட நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களின் முற்பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், பல நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களுடன் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவாக நாட்குறிப்புப் பதிவுகளின் உண்மைத் தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 15,996,195 கூட்டுமொத்தத் தொகையான மூன்று கணக்கு விடங்கள் ஆதார ஆவணங்கள், கொடுப்பனவு தொடர்பான விபரங்கள், சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச நிறுவனங்களின் காசு மிகைகள் 2011 சனவரி 11 ஆந்திகதிய பிஈடி/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்படி அடுத்த 6 மாதகாலத்தின் தொழிற்படு மூலதன தேவை கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். என்னும் பணியகத்தின் மிகைக் காசு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீட்டின்படி மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 30 மில்லியன் காசு மிகைகள் இருக்க வேண்டும்.

(ஆ) 2002 நொவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி பணியத்திற்கு சொந்தமான கணனிகள், கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றிற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை

(இ) 2003 யூன் 2 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் நல்ல ஆமுகைக்கான வழிகாட்டலிற்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.12 ஆம் பிரிவின்படி தொழில் முயற்சிகளால் பின்பற்றப்படும் ஏதாவது நலன்புரித் திட்டம் பொதுத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட வெண்டும். எவ்வாறாயினும் பணியகம் அவர்களுடைய ஊழியர் மருத்துவ காப்புறுதி திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெறுவதற்கு தவறியிருந்தது.

(ஈ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றுநிருபத்தின் 4.2.1 மற்றும் 8.12 ஆம் பிரிவுகளின்படி அடுத்த ஆண்டிற்கான விரிவான திட்டத்துடன் சேர்த்து கடந்த மூன்று ஆண்டுகளை மேவுகின்ற கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பணியகம் தேவைப்பட்டவாறு கொள்வனவைத் தயாரிப்பதற்கு தவறியிருந்தது.

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தன் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 33,714,253 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 8,049,504 ஆன மிகையை விளைவித்திருந்தது. ஆதலால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 25,664,749 ஆன குறைவைக் காட்டுகின்றது. ரூபா 29 மில்லியனால் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுச் செலவினம் மற்றும் சம்பளங்களும் கூலிகளும் என்பன அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் குவைுக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முற்பணக் கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்களின் கொடுப்பனவு தொடர்பான நடைமுறையொன்று வடிவமைக்கப்பட்டிருக்காததுடன் நி.பி 371 இல் குறிப்பிடப்பட்ட எல்லையை கருத்திற்கொள்ளாமல் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 ஐவிட அதிகமாக செலவின மதிப்பீடுகள் இல்லாமலும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நி.பி 384(2) மற்றும் 386 இன் வேண்டுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை என்பவற்றினைக் கருத்திற் கொள்ளாமல் வங்கிக் கருமபீடத்தில் காசோலையை காசாக்கும் நோக்கத்துடன் உத்தியோகத்தரிற்கு காசுக் காசோலைகள் வழங்கப்பட்டது.

(இ) ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் முற்பணப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகமானது 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் பொது பணியகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளிற்காக முறையே ரூபா 25.3 மில்லியன் மற்றும் ரூபா 47.9 மில்லியன் தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தன. பணியகத்தின் நோக்கங்களின்படி, இச்செலவினம் சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றிற்கான நிகழ்ச்சி நிரலாக இலங்கையை கவருவதற்காக ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேம்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுபற்றி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கலாசார நிகழ்வுகள் தொடர்பில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிற்கு பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் இலங்கையை உணரும் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1.6 மில்லின் மற்றும் ரூபா 2.08 மில்லியன் தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உரிய அனுமதி பெற்றுக் கொள்ளாமல் நடாத்தப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 12 ஊழியர்களாகவுள்ளனர். முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதான உண்மையான ஆளணிக் கோப்பு முறையே 07 மற்றும் 10 ஊழியர்களாக உள்ளனர். முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதான மனித வளங்களின் மொத்தக் கிரயம் முறையே ரூபா 5,374,835 மற்றும் ரூபா 6,174,899 ஆக இருந்தன. ஆதலால் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதான ஒரு ஊழியரிற்கான கிரயம் முறையே ரூபா 767,813 மற்றும் ரூபா 617,489 ஐ குறிகின்றது.

## 3.4 வாகனங்களின் பயன்பாடு

சபை, திறைசேரி மற்றும் வரிசை அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் வாகன வாடகை மற்றும் எரிபொருள் படியாக முறையே ரூபா 360,000 மற்றும் ரூபா 194,860 ஆன தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகைளும்

## 4.1 கூட்டிணைந்த திட்டமமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 2 ஆந்திகதிய பிஈடி/12 ஆம் இலக்க நல்ல ஆளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி பணியகத்தால் கூட்டிணைந்த திட்டமும் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவிலை. ஆகவே, பணியகத்தின் நடவடிக்கைகள் மேற்குறித்த திட்டங்களின்படி முறையான வழிகாட்டல் மற்றும் எய்த வேண்டிய தந்திரோபாய இலக்குகள் என்பன இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வித கணக்காய்வுச் செயற்பாடுகளும் நிதிப்பிரமாண இல 133 இன்படி சொல்லப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3. பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் அது பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பதைக் காட்டுகிறன்றது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின்படி வழங்கப்பட்ட என்னுடைய விரிவான அறிக்கை மூலம் பணியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசெட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்களும் முற்பணங்களும்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம

(ஈ) காசு முகாமைத்துவம்

(உ) பாதீடு